செ.வெ.எண்-05 நாள்-05.05.2017

# அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூகப்பொறுப்பு நிதியிலிருந்து ரூ.13 கோடியே 52 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் TANCEM அரசு முதன்மை செயலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி.சபிதா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (TANCEM) அரசு முதன்மை செயலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் **திருமதி.சபிதா இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று (05.05.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்திற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்கள்** தமிழக சட்ட மன்றத்தில் அறிவித்த 110-விதியின் கீழ் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (TANCEM) விரிவாக்க திட்டத்திற்கு **ரூ.675 கோடி** நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்திருந்தார்கள். இதில் மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனமும் (TANCEM) இணைந்து சிமெண்ட் நிறுவனத்தை சுற்றி உள்ள கிராமங்களில் பெருநிறுவன சமூகப்பொறுப்பு நிதியின் மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறது.

அரியலூர் மாவட்டத்திலுள்ள அரசு தலைமை மருத்துவமனை விரிவாக்கத்திற்கு **ரூ.9 கோடியே 50 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்து மருத்துவமனையில் 36,000 சதுர அடி கொண்ட கட்டிடத்தையும் அதில், வரவேற்பு அறையும், சலவை நிலையம், புறநோயாளி பிரிவு மற்றும் உள்நோயாளி சிகிச்சை பிரிவு கட்டிடங்களும், மேலும், அரியலூர், ஆனந்தவாடி, மணக்குடி, சீனிவாசபுரம், தாமரைக்குளம், உசேனாபாத், ராஜீவ் நகர், வாலாஜாநகரம், கிருஷ்ணாபுரம், ராவுத்தன்பட்டி ஆகிய கிராம ஊராட்சிகளில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான அரசுப் பள்ளிக் கட்டிட அறைகள், ஆழ்துளாய் கிணறுகள், பள்ளி சுற்றுச்சுவர், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனி கழிப்பறை கட்டிடங்கள் என **ரூ.2 கோடியே 12 இலட்சம்** மதிப்பில் 24 பணிகள் தேர்வுசெய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

இதனைத்தொடர்ந்து, பசுமை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏரி மற்றும் குளங்களை தூர்வாரி சுத்தப்படுத்தி கரைகளை பலபடுத்தியும் மரக்கன்றுகள் நட்டுதல் மற்றும் சிறு தோட்டம் அமைத்தல் போன்ற பணிகளும், அக்குளங்களில் படிகட்டுகளுடன் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல் போன்ற பணிகளுக்காக **ரூ.1 கோடியே 90 இலட்சம்** மதிப்பில் 18 பணிகள் தேர்வு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

இக்கூட்டத்தில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.கே.என்.இராமஜெயலிங்கம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தனசேகரன், திட்ட இயக்குநர் திருமதி.லோகேஸ்வரி, தமிழ்நாடு அரசு சிமெண்ட் நிறுவன அலுவலர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.